மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 17ம் நாள் செவ்வாய்க் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 311/2017 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

பெயர் .. அய்யாவு வயது .. 67

த/பெ. .. நாராயணசாமி சாதி ..

17.08.2021 - வா.சா.1, 8, 9, 11 மற்றும் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

என் தகப்பனார் பெயர் நாராயணசாமி செட்டியார் என்றால் சரிதான். என் தகப்பனாரான நாராயணசாமி செட்டியார் உடன் பிறந்தவர்கள் பலராமன், ஊமையன், முனுசாமி மற்றும் 2 பெண்கள் பெயர்கள் என்னவென்றால் கமலா மற்றொருவரை கேசி என்று அழைப்போம். எனது தாத்தா பெயர் ரங்க செட்டியார். பலராமன் இறந்து விட்டார். ஊமையன் இறந்து விட்டார். என் தந்தை உடன் பிறந்தவர்கள் தற்போது யாரும் உயிருடன் இல்லை. பலராமன் திருமணம் ஆகமலேயே இறந்து விட்டார். ஊமையனுக்கு வேடியப்பன், முருகன் என்ற 2 மகன்கள் உள்ளனர் என்றால் சரிதான். முனுசாமி என்பவர் காஞ்சிபுரத்தில் வசித்து வந்து அவரது மனைவியான சரோஜா என்பவரை வாரிசாக விட்டு விட்டு இறந்து விட்டார். முனுசாமிக்கும் சரோஜாவிற்கும் பிறந்தவர்கள் 2 பேர்கள். பெயர்கள் எனக்குத் தெரியாது. அவர்களில் ஒருவர் இறந்து விட்டார். அவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை. மற்றொருவர் உயிருடன் உள்ளார். என்னுடன் பிறந்தவர்கள் 2 தங்கைகள். அவர்களின் பெயர்கள் பண்டு, அசோகா ஆகும். அவர்கள் இருவரும் உயிருடன் தான் இருக்கிறார்கள். இந்த வழக்கில் ஊமையன் மகன்கள் வேடியப்பன், முருகன் மற்றும் முனுசாமி மனைவி சரோஜா மற்றும் அவர்களது 2 மகன்கள் மற்றும் எனது சகோதரிகள் ஆகியோரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை

என்றால் சரிதான். நான் 31.01.1992ல் சர்வே எண்.195/பி1 ல் பொதுவில் என் பாகம் 4ல் 1 பங்கான 1 ஏக்கர் 3 செண்ட்டை ரங்கசாமி குமாரர் முனுசாமிக்கு நான் கிரையம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆன பட்டா எண்.317 உப்புறவு ரங்கசெட்டி-1, கண்ண செட்டி பாரியாள் பச்சையம்மாள்-2 ஆகியோர் பெயரில் தான் 3 ஏக்கர் 7 செண்ட் உள்ளதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். உப்புறவு ரங்க செட்டி தான் எனது தாத்தா என்றால் சரிதான். கண்ண செட்டி பாரியாள் பச்சையம்மாள் என்பவர் என்னுடைய அத்தை. அவர் தற்போது இறந்து விட்டார். எனது அத்தை பச்சையம்மாளுக்கு வாரிசுகள் யாரும் கிடையாது. எனது வழக்குரையில் எனது அத்தை பச்சையம்மாள் என்று அவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றும் கூறியுள்ளேன் என்றால் கூறியிருக்கிறேன். மேற்படி சங்கதியை எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, பட்டா எண்.582 ல் க.கண்ணன் வகையறா பெயரில் உள்ள 1413ம் பசலி ஆண்டிற்கான அடங்கலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் உள்ள கண்ணன் என்பவர் எனது தந்தைக்கு மாமா ஆவார் என்றால் சரிதான். தற்போது சாட்சி மாற்றி கண்ணன் செட்டியாருக்கு மச்சான் என்று கூறுகிறார். கண்ணன் செட்டியார் என்பவரும் இறந்து விட்டார். கண்ணன் செட்டியாரின் வாரிசுகள் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் உயிருடன் இல்லை. இந்த விவரங்களையும் எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியிருக்கிறேன். வா.சா.ஆ.3, 18.2.2004ல் போளூர் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட பட்டா எண்.372க்கான சிட்டா சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் சர்வே எண்.195/பி1 என்றால் சரிதான். சிட்டாவில் உள்ள சொத்தின் பரப்பு எவ்வளவு என்றால் 3 ஏக்கர் சொச்சம் வரும். மேற்படி சிட்டாவில் பீமன் மனைவி கன்னியம்மாள், ரங்கப்ப செட்டியார் மனைவி நீலம்மாள் மற்றும் ரங்கப்ப செட்டியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது தாத்தா ரங்க செட்டியார் வாங்கி விட்டார். மேற்படி சிட்டாவில் ரங்கப்ப செட்டியார் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு. மேற்படி சிட்டாவில் ரங்கப்ப செட்டியார் மனைவி நீலம்மாள் என்று உள்ளது சரியா என்றால் சரிதான். வா.சா.ஆ.4, ஆக 1413ம் பசலி

ஆண்டிற்கான மற்றொரு அடங்கல் கணக்கு பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். அதில் கிணறு, பம்பு செட் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை யார் வாங்கினார்கள் என்றால் எனது தாத்தா வாங்கினார். சர்வீஸ் கனெக்ஷன் எண் என்ன என்று எனக்குத் தெரியாது. அடங்கல் கணக்கு பதிவேட்டில் பயிர் வைக்கின்ற விவரம் மட்டும் தான் குறிப்பிடப்படும் என்றாலும் அது என்ன வகையான நிலம் என்று குறிப்பிட மாட்டார்கள் என்றாலும் ஆனால் இந்த வா.சா.ஆ.4ல் டிசி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் இது தவறான ஆவணம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5ன் படி நாராயணசாமி ரெட்டி குமாரர் துரைசாமி ரெட்டி என்பவர் எனது தாத்தா ரங்க செட்டியாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். துரைசாமி ரெட்டி என்பவர் பட்டியல் இனத்தை சார்ந்தவர் அல்ல என்றாலும் பிற்படுத்தப்பட்ட இனத்தை சார்ந்தவர் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6 எந்த அரசு அலுவகத்திலிருந்து பெறப்பட்டது என்றால் போளூர் பழைய நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் அவ்வாறான அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ஐ நான் தமிழ்நாடு எழுதுபொருள் அமைச்சகத்திலிருந்து அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெற்று தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் அவ்வாறு பெறப்படாததால் அது ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. ரங்க செட்டியார் என்பவர் பெருமாள் செட்டியாரின் மகளை திருமணம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். அந்த பெருமாள் செட்டியாருக்கு வரதன், கண்ணன் என்ற 2 மகன்கள் என்றால் சரிதான். கண்ணன், வரதன் இருவரும் ரொம்ப வருடங்களுக்கு முன்பே இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி வரதன், கண்ணன் ஆகியோருக்கு தான் தாவா 1ம் அயிட்ட சொத்தில் உரிமை உள்ளது என்றாலும் எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. எனது தாத்தா அவரது மைத்துனரிடமிருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றுள்ளார். எனது தாத்தா

கிரையம் பெற்றதற்கான ஆவணம் ஏதும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்திருக்கிறேன். தாவா 2வது அயிட்டம் ஒரு விலாகாரனுக்கு



சொந்தமானது என்றால் சரியல்ல. அந்த விலாகரான் தான் எனது தாத்தாவிற்கு கிரையம் கொடுத்த துரைசாமி ரெட்டியாருக்கு கிரையம் கொடுத்து அதில் ஒரு பகுதியைத்தான் துரைசாமி ரெட்டி எனது தாத்தாவிற்கு கிரையம் கொடுத்தார் என்றாலும் மற்ற சொத்துக்களை 3ம் நபர்களுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மொத்த சொத்துக்களையும் எனது தாத்தா தான் கிரையம் வாங்கினார். அந்த மற்ற சொத்துக்களை கிரையம் பெற்ற 3ம் நபர் தான் பீமன் மனைவி கன்னியம்மாள் என்றாலும் அதனால் தான் அவரது பெயர் வா.சா.ஆ.3ல் இடம் பெற்றுள்ளது என்றாலும் சரியல்ல. அந்த கன்னியம்மாள் 2.7.1997 அன்று ஒரு பங்காரு என்கிற லட்சுமிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பங்காரு அம்மாள் அனுபவித்து வந்து ஒரு லட்சுமணன் மகன் காசி என்பவருக்கு வழக்கு சொத்தான 2வது அயிட்டத்தில் ஒரு பகுதியை கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதே பங்காரு என்கிற லட்சுமி அம்மாள் தாவா 2வது அயிட்ட சொத்தில் ஒரு பகுதியை ஒரு சேகர் மனைவி உஷா என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த உஷாவிடமிருந்து தான் 3.4.2003ல் 9ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் அது எனக்குத் தெரியாது. தற்போது அச்சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் நான் சென்னையில் இருப்பதால் எனக்குத் தெரியாது. நான் சென்னையில் ஒரு 20 வருடமான வசித்து வருகிறேன். அதனால் யார் யார் எவ்வளவு சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரங்களை நான் தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் சரிதான். நான் எனது வழக்கறிஞரிடம் பங்காரு என்கிற லட்சுமி மற்றும் உஷாவையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் வருவாய்த்துறையினரை தரப்பினர்களாக

சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சேர்த்துள்ளேன். வழக்கு சொத்து எனது தாத்தாவிற்கு சொந்தமானது என்பதால் என்னிடம் ஒப்படைத்து விடுமாறு நான் யாரிடமாவது சென்று கேட்டேனா என்றால் கேட்டேன். விஏஓ., தாசில்தார் ஆகியோரிடம் கேட்டேன். நான் வழக்கு சொத்தை எனது சித்தப்பாவான முனுசாமி என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டு வழக்கில்



அவசியதரப்பினரை சேர்க்காமல் விட்டு விட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பட்டியல் இனத்தை சார்ந்தவன் என்பதற்கு முறையான ஆவணம் ஏதும் அரசு அலுவலகத்திலிருந்து பெற்று தாக்கல் செய்யாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. பட்டியல் இனத்தவருக்கு அரசால் ஒப்படைவு பட்டா மூலம் கொடுக்கப்படும் சொத்தானது 3ம் நபருக்கோ, பட்டியல் இனத்தை சாராத நபர்களுக்கோ கிரையம் கொடுத்தால் அக்கிரையமானது செல்லாது என்றாலும், கிரையம் கொடுத்தவரின் வாரிசுகளுக்கு அச்சொத்தில் உரிமை கோர முடியாது என்றாலும் அது அரசுக்கே சொந்தமாகி விடும் என்றாலும் சரியல்ல. எனது வழக்குரையில் 4வது பத்தியில் போர்ட் ஸ்டேண்டிங் ஆர்டர் என்று குறிப்பிட்டுள்ளேன். மேற்கண்ட ஆர்டர் என்னவென்று நான் தான் நிரூபிக்க வேண்டும் என்றாலும் அதனை நான் நிரூபிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனவே, பிரதிவாதிகளிடமிருந்து வழக்கு சொத்தை சுவாதீனம் அடைய எனக்கு எந்தவித உரிமையும், அருகதையும் கிடையாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு முழுக்க முழுக்க பிழையுடையது என்றால் சரியல்ல. ஆகையார் நான் பிரதிவாதிகளுக்கு வழக்கின் செலவுத்தொகையையும் இழப்பீட்டுத் தொகையும் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.